**Judicial Form No-53**

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. 4, THOOTHUKUDI.**

**Case No CC 818 / 2022**
**Prosecution Witness –PW 7 , LW 5**

| Name: | பிரின்ஸ் ஷயாம் செல்வகுமார் | Caste: | |
|---|---|---|---|
| Father's Name : | தனராஜ் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | தூத்துக்குடி | Age: | 70 |

**( Accused present. )**

**Solemnly affirmed in accordance with the provisions of Sec 3 and 4 of the Indian Oaths Act 1969 r/w 35,36 of Criminal rules of practice 2019.** 16.07.2024

சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது

முதல்விசாரணை :

நான் ரயில்வே துறையில் வேலை பார்த்து ஓய்வு பெற்று விட்டேன் . எனது மருமகன் ஆனந்த் ஜேசுராஜ் சாலமோன் என்பவர் தூத்துக்குடி ஸ்பிக் ரோட்ல் முள்ளக்காட்டில் உள்ள சர்வே எண். 199 / 19 இல் 7.92 செண்ட் தரிசு நிலத்தை ரூ.3 லட்சத்திற்கு பேசி கிரைய பத்திரம் பதிந்தார்கள் . கடந்த 06.09.2013 கிரைய ஆவண எண். 2664 / 13 அன்று கிரையம் செய்யப்பட்டது . அதில் நானும் யோவான் என்பவரும் கையொப்பம் செய்தோம் . நான் இரண்டாவது சாட்சியாக கையொப்பம் செய்தேன். **என்னுடைய கையொப்பம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை:

ஒரு சொத்தை வாங்கும்போது என்னென்ன ஆவணங்களை பார்வையிட்டு வாங்க வேண்டும் என்ற விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் . ஒரு நபர் சொத்தை வாங்க வேண்டும் என்றால் மேற்படி விபரங்களை தெரிந்து கொண்டு தான் சொத்தினை வாங்கியிருப்பார் என்றால் சரிதான் . மேற்படி விபரங்கள் சரியாக இருந்ததின் அடிப்படையில் தான் புகார்தாரர் என்னை புகார்தாரர் வாங்கிய சொத்திற்கு சாட்சியாக சாட்சி கையொப்பம் இட சொன்னார் என்றால் சரிதான் . அரசு நிலங்களை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யமாட்டார்கள் என்றால் சரிதான் . நான் எனது மருமகனுக்காக சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

ஒம்/–V.C.குபேரசுந்தர்,
நீதித்துறை நடுவர் எண்.4,
தூத்துக்குடி